780

பிஸ்மில்லாஹ்

நாகூர் சாகுல் அமீது ஆண்டவர்களின்

# தர்கா அலங்காரக் கீர்த்தனை.

இஃது.

திண்டுக்கல் தாலூகா வேல்வார்கோட்டை

ம. சே. பக்கீர் முகம்மது லெப்பை சாயபு அவர்களால்

இயற்றியது,

ஷெ ஊர்

அ. கா. சாகுல் அமீது ராவுத்தரவர்கள்

பொருளுதவியால்,

மதுரை அஷ்டலக்ஷ்மி விலாசம்ப்ரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

இதன் விலை அணா 0-1-0] [Price Rs 0-1-0

786

பிஸ்மில்லாஹி.

திருக்கோஷ்டியூர் போஸ்டு பிருமணன்பட்டி
அருட்கவி கா. மு. அல்லாப்பிச்சைப் புலவர் கொடுத்த
சாற்றுக்கவி ஆசிரியப்பா.

---

புதியதேனமுதோ முத்தமிழ்க்கனியோ
புகழுதற்கினிய கற்கண்டோ
பூமகள்மருவு மமுதபாக்கடலோ
புலமையான் புகலுதற்கறியேன்
அதிகமாதவநேர் பெருகியகாதைக்
காசரென்றுதி நாயகனின்
அருள்மிகுத்திடுஸா குல்ஹமீதொலிமேல்
அன்புகூர்ந்தகமிக மகிழ்ந்து
நிதிசொரிந்திடுபா மாலையொன்றியற்றி
நெறியொலிபத மலரணிந்தான்
நித்தியமங்களநே ருருவேல்வார்கோட்டை
நிபுணியாஞ்சே கப்துல்காதர்ப்
பதியருள்மகவென் றிருவுலகிலுமே
பகர்திருப்புகழ் பரவியநற்
பக்கிருமுகம்ம தெனுமதியுடைத்து
பலகலைபொழியும் பாவலனே

பிஸ்மில்லா.

திண்டுக்கல் தாலூகா வேல்வார்கோட்டை

ம. சே. பக்கீர்முகம்மது லெவ்வைசாயபு இயற்றிய

நாகூர் ஸாகுல்ஹமீதோலியுல்லா அவர்களின் தருகா.

# அலங்காரக் கீர்த்தனை.

(ஆசிரியவிருத்தம்)

பூமேவுவாசமதுபோ லெவ்வுயிர்க்குளே
    பொருந்திநல் லொளிவுமாகிப்
புகழருசுகுருசுமுதல் கலம்லௌகுகந்தாம்
    புவிகடல் திசைகள்மதியும்
மாமேவுபருதிஜின் கணமுதல்யாவையும்
    வகுத்தழிக்கின்ற பரமே
வல்லவா அல்லாகூ சொல்லுதற்கரிதான
    வாகிதுரூதான பொருளே
காமேவுஸாகுல் ஹமீதொலியுல்லாவின்
    காரணமான தருகாக்
காக்ஷியதையுலகமிசை பலவிதராகமாய்க்
    கழறவே கவலையகல
தாமேவுயாறப்பி வாலமீனுனவா
    திணையிணையிலாத றஹீமே
தகவிலாமல் கருணைபுரிகுவா யெப்போதுந்
    தஞ்சிடாஞானமணியே

---

(நாயகமே நம்பினேன் யென்றராகம்)

இராகம் தேசிகதோடி தாளம் அடாணு

[பல்லவி]

... செய்பவனே மெய்யனே

தமிழ்நாடு ... 
224321
சென்னை-600 008

(அநுபல்லவி)

வையகம்மெல்லாம் அமைத்து செய்யமுத்தொழில் மிகுத்து
கையுல் கையுமாயுதித்த ஆதி ஜோதி நீதி யாகிய (வ)
மையிருளையும் அமைத்து வெய்யவனையும் படைத்து
அய்யறிவையும் அமைத்த யா ரஹீம தாய் நிறைந்த (வ)
வியல்பெருஞ்ஸாகுல் ஹமீது வியல்தருகா மீதிப்போது
உயர்கவியோத தப்பாது உதவி புரிவாய் நிரைவா யிறையே (வ)
நயமுதவ வேளையாது நாயனே உனையல்லாது
தயைபுரிகுவாய் தப்பாது சாற்றும் பக்கிரு முகம்மதின் மீது (வ)

---

(ஹமாறநபி யென்ற ராகம்)

இராகம் செஞ்சுருட்டி, தாளம் ஆதி

[பல்லவி]

நாயகமே நம்பினேனே கருணைசெய்வீர் (நா)

(அநுபல்லவி)

தாயகமாய் விளங்குஞ் சபீகுல்முதினபீனே
சையதகம்மதெனுங் துய்யறெகுலதான (நா)

(தொகைஹறு)

தூயமறையின்பொருளாய் விளங்கிய தூவலர்போற்றுந் [துகவிலாமணியே
தோயமதனைபாலையில் அழைத்துச் சகமூட்டுந்தூமணியே

[பல்லவித்துடர்]

பாயலைசூழ்மதினுப் பண்மையுருமாசே
பத்தியுடன் துதித்தேன் சித்தம்வையுங்குராசே (நா)

(தொகைஹறு)

சாயல்சூழ்நாகூர் தருகாவளஞ்சொல சற்குருவாகியதாயகமே
நேயமுடன் அருள்செய்வீர் முகம்மதுநிறைதவமே

[பல்லவித்துடர்]

சேயன் பக்கீர்முகம்மத் செய்பிழை பொறுத்தருள்
சித்திமுத்திக்குகந்த குத்துபுத்தாருவான (நா)

---

சோமஷேகர னருளு யென்ற மெட்டில்

(பின்மகுடம்)

இராகம்தேசிகதோடி தாளம் ஆதி

[பல்லவி]

மாதலத்திலேகமியாய்     வந்தயோர்கள்—யிரு
பாதமலரைப்பணிவே     னேனுளத்தில்     (மா)

[அநுபல்லவி]

சீதமூரு நாகைநகர்     காதலுருவியாம் அரசர்
சிறந்தபள்ளியின்     மகிமைசொலவென்
பொருந்துமனதின்     நிரைந்த கவிக்குண்
சித்தம் வைத்திடுவீர்     முத்தியபூபக்கர்
பத்தர்பதத்தையே     கத்தினேன்சிரசிர்     (மா)

(சரணங்கள்)

வேதமதனைப்பிசகா     நீதருமர்—யிரு
பாதமதனைப்பணிவே     னே அகத்திர்
சாதுஉத்துமான் பதத்தை     ஆதரவுடன் துதித்தே
சங்கை யருசின்மேல்     மங்காப்புவியான
துங்கர் அலியுல்லா     மங்கலசூதரணங்
தனையனுதினம்     மனமூவப்புடன்
அணிவேன்சிரசின்     கணஉதிப்புடன்     (மா)

காதம் கரைவீசும்நபி     நாதர்—பேரான
மாதவத்தசேன் உசைனார்     பாதமலர்
கோதரப்பணிந்து நிதம்     மூத்தறிவுடையோர் பாதம்
குத்து புலக்குத்தா     பென உதித்திடும்
கௌதுலகுலம்     பதத்தையும் நிதம்
குறையாம்மகிமை     பெருகும் ஒலிகள்
தாஜா உயர்ந்தோர்     அரவிந்தப்பதம்     (மா)

சோதிமதில்சூழும் வேல்வார் கோட்டைவாசன்—கவி
சொல்லிடும் பக்கீருமுகம்ம தென் னூர்தாசன்
நாதர்கலி மார்களையும் நல்ல ஒலிமார்களையும்
நாவில் லனுதினம் பாடித்துதித்திடும்
பாவில் குறையனு காமலருள் செய்யும்
நற்றவம் பெற்றிடும் கொற்றஹமீதொலி
சொற்றலம் பாவரம் பெற்றிடவே செய்யும் (மா)

---

விருத்தம்.

பகலவனுதித்தாப்போல பண்மை சேர் மனாறாப் பாராய்
விகசித தீபம் போல விளங்கு நற்கல சந்தேறாய்
சகமெலாம் புகழுந் தங்கக் கொடி சுழல்ச்சு இசைக்கூறாய்
அகமகிழ் ஹமீதுல்லாவின் அருமை சேர் பள்ளிபாராய்

சேந்தாளம் பூ வந்தேன் கமழும்-என்ற மெட்டு.

இராகம்-தேசிகமாங்கு தாளம் யேகம்.

கண்ணிகள்.

மங்காமணிமை மனாறுவளத்தை
மங்கையே பாரு நீ மகிழ்ச்சியாய்
சிங்கார மாயிலங்கித் திங்கள் போலதுலங்கி
சிறந்த அண்டத்தின் வரையுயர்ந்தது
மிகுந்த மண்டலம் புகழ்மிகுந்தது (ம)

துங்கமிகுந்ததின் புங்கம் முத்துச்சுதை
சொலிக்கிதே மனங்களிக்கிதே
பங்கமிலாமலது தங்கக்கலசம் வைத்து
பத்தி பத்தி யாக சுத்துமதில்களில்
கொத்துகள் வைத்தது ரத்தின தீபம் போல் (ம)

அஞ்சி தமனாறு மாடங்கள் மீதினில்
கொஞ்சும் மணிப்புறாக் கூட்டமே
குஞ்சகளுடன் குழவி மிஞ்சுதே மகிழ்ந்துலவி
கொற்றவர் ஹமீது நற்றவத்தாலது
சுற்றும் வளர்ந்தது வெற்றிசையும் புகழ் (ம)

ரஞ்சிதம் பொருந்தும்    பஞ்சவர்ணக்கொடி
தஞ்சன் காதர் பதந்    தாங்கிக்கிதே
சஞ்சல மகற்றுந்திரு    மஞ்சவரை உயர்ந்து
ஜலஜலனவே    ஒளிபெருகவே
அலைசேர் கடலின்    உலகோர் புகழும் (ம)

கஞ்சமலர் வாவி    நாகூர் தனில்வாழுந்
காதர் ரொலி    இருபாதமே
தஞ்சம் யெனவேநிதஞ் சாற்றும் பக்கீர்முகமத்
சாகரஞ்சூழ் புவி    மீதில் தருகாவி
யேகவளங்களை    கூறுகிறேன் ஒளி (ம)

---

அய்யாப்பழனிமலை வேலா-என்ற மெட்டு.

இராகம் சஹானா தாளம் ஆதி.

கண்ணிகள்.

திருவாம் நாகூரின்    கடை வீதி—அந்த
தெரிகிது பார்யென்ன    ஜோதி—நம்மள்
குருவாம் அப்துல் காதர்    கியாதி—யாலே
குறையாமல் விற்குங்    குணசேதி (தி)

வச்சிறமும் பவளம்    பாரு—அதில்
கஸ்தூரி அம்பருகள்    தேரு—நல்ல
விஸ்தாரமாகிய    பன்னீரு—மிக
ஒஸ்தியாய் விற்பார்    களின் சீரு (தி)

மல்லிகை முல்லை    இருவாக்ஷி—மகிழ்
புல்லிய சண்பகங்கள்    காக்ஷி—சொகு
கள்ள பரிசதங்கள்    நேக்ஷி—மிகு
உல்லாசமாக விற்பார்    தேர்க்ஷி (தி)

வள்ளல் ஹமீ    தொலியின் கீர்த்தி—நல
முள்ள கடைவீதிகள்    நேர்த்தி—கவி
சொல்லும் பக்கீர்    முஹம்மது பூர்த்தி—யாக
விள்ளும் பூப்பந்தலை    பார்கோர்த்தி (தி)

---

## நாதாபாய் யென்ற மெட்டு.

### பல்லவி.

யாராய் நீ மலர்ப்பந்தலை பாராய் நீ
பண்மை யிருந்தது விண் மணிபோன்றதை (பா)

### அநுபல்லவி.

மாராப்புகழ்மிருந்த மீறு ஒலிபொருத்த
மகிமைச்சந்தனக் குடம் வந்ததிலே
ஜிகமெய்சுந்தரம் மிருத்தயெழிலைப் (பா)

### தொகையரு.

சோராத வக்ஷரக்கால்களை நாட்டித்துலங்கும்ரத்னம்
பூராகமேவிவளைகளைப்பூட்டிப்புகழ்பவளம்

### பல்லவிதொடர்.

காரார்வரையுயர்ந்து கம்பமதுவேசிறந்து
கதித்தமுத்துகள் தொடுத்தசரங்கள்
பதித்தமணிகள் விதித்தபந்தலைப் (பா)

### தொகையரு.

தாராளமாகக்கதலி யிலாக்கனிகளைச்சாஞ்சரமாய்
யோராளமாதுளை கொய்யா எழுமிச்சையிடையிடையே

### பல்லவிதுடர்.

சோராமலேமலர்கள் சுத்திலும்பதித்ததுகள்
துலங்குஞ்சந்திரன் மகிழ்ந்து வந்ததின்
விளங்குந்தன்மையின் யிலங்கும்பந்தலைப் (பா)

### தொகையரு.

வீரானஅஸ்த்தர்குளோப்புகள் சேட்டுகள்விதித்ததிலே
சீரானகாசிஇலக்ட்டர்சேர்விளக்குகள் சேர்த்ததிலே

### பல்லவித்துடர்.

கோராயிலங்கும்மது நீலரசக்குண்டுமிது
நிரைந்தபக்கிரு முகம்மது இரு
பொருந்துங்கவிபோர் சிறந்தபந்தலைப் (பா)

---

அனுமந்தநடித்தானே யென்ற மெட்டு,

இராகம்-மத்தியமாவதி-அடாதாளசாப்பு.

பல்லவி,

திருமணிஒளிர்தமே வருகிறது
தெரிகுது பார்முன்னமே என் அன்னமே (தி)

அநுபல்லவி.

குருமணியானஸ்ாகுல் ஹமீதுபிருபதத்தை
கோரிவிரைவுடனே பாரில்நடைபிருக்த (தி)

சரணங்கள்,

அருமை உருளையது பெருமையுடன்பிருந்து
அச்சுவச்சிரக்காலுகள் கெர்ச்சிதத்துடன் அமைத்து
அங்கணம்யேழையும் பொருத்தி இடைக்கிடை
தங்ககலசங்கள் யிருத்திபுவிபுகழ
அஞ்சிதம்பொருந்துஞ்சுத்துப்பஞ்சலோகத்தாலேகொத்து
கொஞ்சுதுரசக்குண்டுகள் கஞ்சணத்துடன்மிருத்து
மிஞ்சியமலர்கள்தொகுத்து ரத்தினத்தாலே
பிஞ்சுகள் காயிகள் வகுத்து யெழில்பிருத்து
அக்குமணியனந்தம் சொக்கு மணியனந்தம்
மிக்கபவுராகிய பக்கமணியனந்தம்
அணைத்து முத்தினை பதித்துகுடங்கைகளில்
யிணைத்துசெடிகள் விதித்து நிரைநிரையாய்
அஸ்த்தர்குலோப் பால்சேட்டுகள்
சுத்திலும் இலேக்ட்டர்கள் பத்தியுடனேசொலிக்கு
[சித்திரவிளக்குகளும்]
பண்ணிபதித்தே துலங்குது கண்ணினால்
[பார்க்குக]
யென்ன விதமாய் விளங்குது குருசதனை
பார்க்க நலசேர்க்கைபுல யேர்க்கைசொல்தீர்க்கமுல
பத்திடன் நாகூர்வளஞ் சுத்திவருந்தருகாவில் (தி)

மெத்தஜனங்கள் கூட்டம் பத்திவருவார்பீட்டம்
சுத்திவருவார் நாட்டம் யெத்தனையோகொடியூட்டம்
விண்ணகந்தனையுலாவுது பச்சைசிகப்பு
உண்ணியகொடிகள் பாரது மதிமகிழ
மிக்கவெகுபாணங்களும் சக்கரபாணங்கள்களும்
முக்கிய பொரிபாணங்கள் பக்கநாகபாணங்களும்
முன்னிலையிலே சொலிக்குது சபினுப்பெட்டி
தண்ணியல்பதாய விழிக்குது மிகபெருமை
கண்ணகன் ஞாலங்களிலே உன்னிதம்பிதோயெழிலே
தன்னுமைநிண்டிமட்மேலேசெ-யன்னவிதமானதாலே
சச்சரி பூரிகை தவிலும் இடக்கையோடு
உச்சித பில்லாங்குழல்களும் தாளமேளங்கள்
சங்கு கொம்பு பம் பம்மெனயெங்கும்பம்பைகும்கும்மென
சத்தமேகக் கெர்ச்சனையின் யெத்திசையும் மேகிரணச்
சாகரம் போல ஒளிக்கிது ஆலவட்டங்கள்
மேகதுலத்தை மறைக்கிது மிகமகிமை
யாகவே கடைவீதியின் பாகமாய் நெருங்கிவா
வாசைமிகு பக்கீர் முகம் மூதுகவி காகரிகத் [தி].

---

சித்திரப் பச்சைக் கச்சைகட்டி—என்றமெட்டு.

பல்லவி.

விச்சித்திரச் சுத்துமுத்துப் பவளக்கடைவீதி அதின்
மேன்மைகளை யென்ன சொல்லுவேனே நல்கியாதி [வி]

றட்சகருகியகாதி ஒருவிபதம்
நாடிப் பணிந்தால் நலம் பெரலாம் நீதம்
யிச்சையுரும் நாகூர் தருகாபஜார் நீதம்
யெங்கும் புகழ் பொங்கும்மகிழ் தங்கும் யெழிற் சங்கையுள [வி]

## சரணங்கள்.

பத்தி பத்தியாக வைத்த　　கடைகளின் சீரு-உயர்
பண்மை தருங்கிண்ணம் என்னுங்கும் பாக்களைப் பாரு-எழில்
கொத்துச் சரப்பளி முத்துச்　　சரங்களைத் தேரு நல்ல
கோமேதக் கற்கள்　　தாமதிப்பார் விலை நேரு-திருப்
　　பத்தினியே　　பவளக்கடை பாரடி
　　பங்கமில்லாப்பிங்கா　　ளின்கடை தேடி
　　சித்திரமான வெழு　　த்துகள் கூடி
　　சிகமீதினி விதுபோவினி மகிழ்காணினி புகழ் பூணனி　　[வி]

மாடமணி மேடைகூட　　கோபுரங்கள் நோக்கு அதில்
வைத்த பலசரக்குக்கடை　　கள் யென்ன சோக்கு மிக
நாடுஞ்சினி நலகற்கண்டு　　தேன் பழந்தாக்கு உயர்
நத்திய பத்திகள் வாசனைகள்　　மெத்தப் பூக்குந்துய
　　ரோட நறையுரும்　　பன்னீர் கடைகளும்
　　ரொட்டி புரோட்டாக்கள்　　மிட்டாய்க் கடைகளும்
　　நீடுஞ்சேடசநேரி　　சாமான் கடைகளும்
திதியோங்கிய சுதைதாங்கிய மூதிர்வீங்கிய சதிருகிய　　[வி]

கற்சிதமான மருமல்சரிகை　　யின்காப்பு—உயர்
காசிபனாரசு வில்லுரிப்　　பட்டுகள் வாப்பு—மிகு
உசிதமாகிய கான்பூரு　　சால்வைகள் சேர்ப்பு—திரு
வைதாவில் வெட்டுகள்　　பீதாம்பரங்களின் சாப்பு—எழில்
　　விசித்திரமாகிய　　கெண்டை சவுக்கங்கள்
　　விதவிதமாக　　விளங்கிய மல்லுகள்
　　பச்சைக்கலருள்ள　　ரோசாப்புடவைகள்
பாக்கப்புகழ் பெற்கைத்திரல் சேற்கைப்பொருள் யோக்யத்தருள் [வி

அஞ்சுகரஞ்சிதக் கொஞ்சுங்　　கிளி மொழிமானே—அதோ
அந்தா தெரிகுது விந்தை　　வளவிக் கடைதானே—சுய
கஞ்சணம்வைத்து வழுந்துஞ்　　சுதேசிகள்தேனே—உயர்
கங்கணம்பச்சை நகுதா　　வளவிகள்தானே—திரு
　　பஞ்சவர்ணமுள்ள　　பட்டு வள்விகள்
　　பார்க்க ஒளிவுள்ள　　கோட்டு வளவிகள்
　　செஞ்சொல் பக்கீர்　　முகம்முது தோதுகற்பாக்கள்
தெவிட்டாதிது ரைட்டானது அருட்பாவிது திறட்டானது　　[வி]

---

07:47 N30

## நாகூரு மீரா ஒய்யாரா—என்றமெட்டு.

கண்ணிகள்.

அண்ணல் சாஹுல் ஹமீது    கண்ணயமார் தருகா
முன்னால் பல கடைபார்-அதுகளில்யென்ன விநோதங்கள்-தேர் (அ)

விண்ணம் மில்லாவடை    பண்ணுங்காரு பூந்தி
தின்னும் முறுக்குகள் பார்—உப்புமாகாப்பி பின்னமில்லதிருநேர (அ)

தேனுஞ் சீனி மாவும்    தானும் பிசைந்த ஹல்வா
பூணும் புரோட்டாக்கள் பார்    செமியாபுட்டு தோணும் பாயாசங்கள் சீர் (அ)

லட்டு சிலேப்பிகள்    தட்டங்களில் நிரப்பி
கட்டும் பூந்திகளைப்பார்    சர்க்கரை சேரு மெட்டு மெட்டா இருக்கு நேர் (அ)

வாழைபிலாக்கனி மாதுளை    கொய்யாக்கள்
தாழைமலர்களைப்பார்    மகிளம்பூ வாடை சொரிக்குது கூர் [அ]

மட்டில்லாத புகழ்பெற்ற    ஹமீதொளி நற்றவத்தின் பதமே
பக்கீர் மூகம்மது    சொற்றலம் பாவரமே [அ]

---

## ஆதி சோதி-என்ற மெட்டு.

கண்ணிகள்.

அன்னமே அண்ணல் தருகா    முன்னாலே சதுர்க்கச்சேரி
வின்ன மில்லாமல் நடிக்கிங்    கன்னல் மொழிமங்கையபார்
தத்திம் தத்திம் தத்திம் தத்திம்-தாகிட தைதீம் தோமென தைதீம்
தத்திமிதிருத்தமி    தித்திமத்தளத் துடனே [அ]

பண்ணமை யிர்துஸ்தான்    தோடி
பாரடி டப்பா    பிலஹரீகாடி
கன்னல் ரசமான    கல்யாணி
சாம்பொதி சஹு    காமசிபாடி. [த அ]

சென்னை-600 008
224321

உன்னிதத்தில் லாரு
ஜைக்கம் பைரவி நாத்தரு — கனல்
சண்ணை சங்கு நபலாக் — நல் அசல்
சரிமுக வீணை — கட்டை
அக மிக மகிழ [த அ]

கன்னடைய கேதார — ஜௌளம்
நாட்டை குறிஞ்சி — பாட்டின் உல்லாசம்
கெண்ணிய சாவேரி — சகாரு
கீர்வாணி முகாரி — யமுனு [த அ]

சொன்னேன் மகிமை — கண்ணால் பாரு
நடி யிடை மயிலே — கருகா நேரு
மன்னன் பக்கீர் — முகபமது கூறும
மதுரக்கவியை — மனமகிழ்ந்தேழு [த அ]

---

வனச்சாச்சி—என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் கோடி தாளம் யேகம்.

பல்லவி.

கனகாங்கி — கமழ் தருகாவி வேகஷி [க]

அநுபல்லவி.

துணை சாஹுல் ஹமி தொலி — மிருபதம் போற்றித்
தூண்களை வரிசை — நிரையுடன் யேற்றிக்
கனமாகத மென — விட்டங்களைப்பூட்டிக்
கங்கு கரையில்லா அதை — மதில்களை நாட்டிக்
கஞ்சனம்பூட்டிக் கதவைநாட்டிக் கவலையொட்டிக் கருணைகாட்டுங் [க]

மனமூவர்திடும் லஸ்த்தர் — குலோப்புகள் சோக்கு
வரிசை யுடனே — சாவிளக்குகள் தாக்கு
தினகரனெனக் — குத்துவிளக்குகள் தூக்குங்
திரிபூவனம்மதிக்கி — நிலைகளின் விளக்குங்
திருவதர்க்குந் திங்கள்போல்சோக்குந் — திரலேசேர்க்குந் திசை
[யோர்பார்க்கும் [க]

அணியணியாகச் ஜனப் பெருக்கங்கள்பாரு
யாகுவென ஓதுந் திக்கீர் முழக்கங்கள்பெரு
கனகுடை முஹம்மது சலபாத்துபேருங்
காதிறுஜீலி மவுலூது ஓதுவார்கள்சிருங்
கதிகஸ்தூரி கமழ்கஸ்தூரி கருணைபீரி சார்பார் பாரிர் (௧)

வனமிருகாவிக்கைக் குடங்களின்மீது
மகிமையாய்பவன்பணிந் சொரிவார் யெப்போது
குணமிருபாத்திஹா ஓதல் தப்பாது
கூறும் கவி பக்கீர்முக மூதன்பாதமீது
குருவேபோற்றிக் குதுபைவாழ்த்தி குறைபைத்தூற்றிக்குணத்
[தையேற்றி [௧]

கண்டோர்களிக்கவந்த மாது வென்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி. தாளம் ஆதி

பல்லவி.

பரமனருள் மிகுத்தநாதர் சாகுல் ஹமீதின்
பள்ளிவழத்தைப் பாரிப்பாரிர்

அநுபல்லவி.

திராய் வளர்ந்துதங்கக் கிரிபோல் மிகுந்ததங்கத்
தினகரன் போலெயெங்கும் திருவாய் விளங்குமெகிழ் [ப]

சரணங்கள்.

சுதையாய் மஜமர்கல்கள் பாவி முத்திஞல் சாந்து
தூய தாய்யெழில் பெருக மேவி விளங்குந்திரு
கதிர்போல் மகரகிலே பாவிக் கஞ்சணமதால்
கதவுகனகமென்த் தாவி நிரைநிரையாய்
வச்சிரத்துடனே பலஉச்சித் தூண்கள் அனேகக்கோடி—அதுகளிலே
பச்சை வைரஞ்சிகப்பு கர்ச்சித்துடன் குலோப்புசோடி—மிகஅருமை
இச்சைதரும் மூச்சகமும் விச்சித்திர மாவிளக்கு நீடி—மதியை நிகர்
அச்சமில்லாக் காந்தங்களில் நற்சதுர பளிங்குகள் கூடி—தகதகென

விந்தை செறிந்த விளங்கு — மதில்களின் ஜோதி—பலவிதமாய்
புந்தி மகிழ்ந்து வரைந்த — செடிகளின்சோதி—அமரர்களும்
வந்து நிறைந்து மகிழ்ந்து — புகழ்ந்திடுசேதி—தருகாவதை
யெந்தவிதஞ் சொலுவோமென — புந்திகள்நீதி—அனுதினமும்
வந்தனஞ்செய்திடு — வார்பலகோடி
வள்ளல் ஹமீதொரசி — பதமதைநாடி
சந்ததம் பக்கீர் — முகம்மது பாடித்
தனியவன் அருள் — நிதங்கிடைத்திடக்கூடி [ப]

---

[விருத்தம்.]

அருந்தவமுடிவாய்வந்த அகம்மது நபியுல்லாவின்
பொருந்திய மரபிலுற்ற புண்ணிய அசன்குத்தூசின்
திருந்திய மகவாயுற்ற செய்யது ஹமீதேஉங்கள்
வரந்தரும்பதத்தை நித்தியம் மனதினுள் இருத்துவாமே.

(ஹமாரே சர்வரே ஆலம் என்ற மெட்டு)

[கண்ணிகள்]

சாகுல்ஹமீது நவநீதா — தயைசெய்
தருணமே வேதா — வாகை
புனையுங்குணதாதா — மாணிக்கப்பூர்
வளர்ந்த — மலர்ப்பாதா [சா]

தொகையறா.

யோக செம்பிர நீர சம்பூர்ண — முற்றருள் பெற்ற குருவே
சாகரவங்கம் யேகையில் உடைந்திட — கண்ணாடியால் அடைத்த
[தருவே

பாட்டு தொடர்.

மாகமே அழாவுந்திருச்சோலை — திருவாரூர் மணிரதத்தேரை
யேகவே விடாமல் செய்தோரே — இறையோன் அருள் மிகுந்
தோரே [சா]

தொகையறா.

ஆதுரச்சாபா சோகிபறந்திடச் சுடரவனால்
வாதைபாய் கீழே வீழ்ந்திடச் செய்தீர் மவுனமதால்

(பாட்டுத்தொடர்)

வாதனைசெய்யவசைகாவி அன்னத்தில் வைத்த மன்னனே
சேதமாகச்செய்தபின் உயிரைச்செலுத்தி நீர்கோனே (சா)

(தொகையறா)

நாதரே உங்கள் இருபாத விந்தத்தை நாடிநிதம்
ஆதரவாகயெண்ணியபய்யல் கருள்புரியும்

[பாட்டுத்தொடர்]

மாதவத்தசன்குதூஸ் ஙகவே மகிமைமக்கிடாப்பூவே
ஓதிடும் பக்கீர்முகம்மதுவே கவிக்குன் உதவிபுரிநலவே (சா)

---

[மதீனமே மோரா சய்யாயென்ற மெட்டு]

[பல்லவி]

மாமலர் பொற்பாதந்தாரும் வள்ளல்ஹமீதே யெங்கள்
வள்ளல் ஹமீதே வள்ளல்ஹமீதே [மா]

[அநுபல்லவி]

தேமலர்பொழில்சூழ் நாகூர்தேசிகரே திரு [மா]

[தொகையறா]

காமமதனைபுவியோர்கள் போற்றும் ரட்சகரே
தாமதமில்லாமல் தயவேபுரிந்திடுஞ் சர்ச்சனரே [மா]

[முடுகுசந்தம்]

சங்கைவிளங்கிய மங்கள நாதா
யெங்குமிலங்கிய பங்கயப்பாதா
தனியவன் நருளே
இனியமெய் பொருளே
தனையன் துயரகற்றுஞ் சற்குருவே உங்களின் [மா]

[தொகையறா]

பூமலர்சோலை மாதஞ்சைராஜன்　　பொல்லாப்பிணியே
தாமதமில்லாமல் நற்சுகஞ்செய்யுந்　　தவமணியே

[முடுகுசந்தம்]

தஞ்சமே உன்னிரு　　செஞ்சரணப்பதம்
அஞ்சலிசெய்தனன்　　நெஞ்சிலனுதினம்
சாது　　சந்தோஷம்
மூழ்கிட　　நேசஞ்
சாற்றும் பக்கீர்முகம்மத்　　போற்றுங் கர்ப்பகக்காவே　[மா]

---

ஆதி திருதூதா—என்ற மெட்டு.

பல்லவி.

நாகை நகர் நாதாபதம்　　நம்பினேன் பொற்பாதா　[நா]

அநுபல்லவி.

சாகுல் ஹமீது வேதா　　தயைசெய்யும் நவநீதா அருள்
தங்கும் பொங்கும்　　யெங்கும் சங்கை　[நா]

சரணங்கள்.

வாகுமிகு தஞ்சை நகர்　　மன்னன் பிணி அஞ்ச
யீகையது மிஞ்ச　　யிருபுவியோர்களுங் கொஞ்ச
யிரு பாதந்தாருஞ்　　சீதசற்குரு　[நா]

சாகரத்தின் மீதேதமணி　　தவறிவிழும்போதே
சல்நீகில் தீயின்மீதே　　அள்ளிய யெடுத்த பாதே உயர்
சாது வேத　　நாத போத　[நா]

பாகமுடன் ஓதும்　　பக்கீர் முகம்மத் மீது
பக்ஷம் வையும் யெப்போதும்　　ரச்சகரே தப்பாது திரு
பத்தி முத்தி சித்தி　　நத்திடும் அருள்　[நா]

---

விருத்தம்.

திருவளர் நாகூர் வாழுஞ் செய்யது ஹமீதுல்லாவி
னருமைசேர் பாவை வல்ல அச்சதுயி பற்றும்வண்ணம்
தரும நற்றயாளனான சாகுல் ஹமீது மன்னன்
பெருமைபே யோங்குதற்கு பெரியவனுத வியாமே.

# ந. பெ. ஜெயராம்நாயுடு அன்கோ.,வில்

---

பிரிண்டு வேலைகளும், லேபேடு, குறிப்பு சீட்டை, பட்டியல், உண்டி, ரசீது, பெர்மிட் முதலிய விலாசமமைத்த புஸ்தகங்களும், அவரவர்கள் விருப்பத்திற்கிணங்க நேர்த்தியாக ரூல் போட்டு பிரிண்டுசெய்து உறுதியாக பைண்டு செய்து கொடுக்கப்படும். அந்திய நாட்டு வியாபாரிகள் மாதிரி காப்பியும், அட்வான்சும் அனுப்பினு லொழிய ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது:—

புஸ்தகங்கள் வி. பி. மூலமாக ஆர்டர் கொடுப்பவரிடத்துக்கு அட்வான்சின் பேரில் அனுப்பப்படும்:— விவரம் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்தாருக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

எங்களிடம் வாசனை சீயக்காய் பொடி மூலிகைகளாலும், பச்சிலைகளாலும் தயாரித்தது ஒரு குரோஸ் ரூ 1—8—0. டஜன் குரோஸ்ஆர்டர் செய்கிறவர்களுக்கு வி. பி. சார்ஜ் கிடையாது.

**ந. பெ. ஜெயராம் நாயுடு அன் கோ,**

பிரின்டிங் கமிஷன், ரூலிங், பைண்டிங் ஆபீஸ்,

வடக்குவீதி, திண்டுக்கல்.

சென்னை-600 ...
224321
27:417
N23

அன்பார்ந்த நண்பர்கட்கும், வியாபாரிகட்கும் அத்யாவஸ்யமான அறிவிப்பு:—

எனது அன்கோவில், அச்சுவேலைகளும், பயின்டு வேலைகளும், நேர்த்தியாகவும், சுலபமாகவும் காலதாமதமின்றி தனிப்பார்வையில் செய்து முடித்துக் கொடுக்கப்படும்:—

பேரேடு, குறிப்பு, சிட்டை, ரசீது, உண்டியல், கச்சாத்து, முதலிய புஸ்தகங்கள் விலாசமடித்தும், சாதாவாகவும், குறிப்பிட்ட காலத்தில் கொடுக்கப்படும். விவரம் தெரிந்து கொள்ள விரும்புமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்தாருக்கு எழுதி தெரிந்து கொள்ள கோருகிறோம்.

**ந. பெ. ஜெயராம் நாயுடு அன் கோ,**

மெஷின் ரூலர்ஸ், புக் பைண்டர்ஸ்,

புக்செல்லர்ஸ், ஸ்டேஷனர்ஸ்,

வடக்குவீதி, திண்டுக்கல்.